**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சேந்தமங்கலம்.**

**முன்னிலை: சீ. ராஜ குமாரன் B.E. L.L.B.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், சேந்தமங்கலம்.**

**2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**2057 வது திருவள்ளுவர் ஆண்டு, பராபவ ஆண்டு, ஆடி மாதம் 05ம் நாள்**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 415/2025**

**(CNR.No. TNNM-14-001612-2025)**

அரசுக்காக

காவல் உதவி ஆய்வாளர்,

சேந்தமங்கலம் காவல் நிலையம் – குற்ற முறையீட்டாளர்

(குற்ற எண்.101/2024)

எதிர்

1) சதீஷ், த/பெ. பழனி,

2) மணி, த/பெ. தங்கராஜ்,

**எதிரிகள் இருவரின் முகவரி:–**

செல்லியம்மன் பாளையம்,

சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல். – எதிரிகள்

**( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற R.O.C No. 814/2020/RG/F1. தேதி: 07.04.2021 உத்தரவு படி)**

| | | |
|---|---|---|
| 1. | சம்பவ நாள் | 18.04.2024 |
| 2. | புகார் நாள் (குற்ற அறிக்கை தாக்கலான நாள்) | 24.11.2025 |

<table>
<tr><td>3.</td><td>எதிரிகள் கைது செய்யப்பட்டு<br><br>பிணையில் சென்ற நாள்</td><td><table>
<tr><th></th><th>கைது செய்யப்பட்ட நாள்</th><th>பிணையில் சென்ற நாள்</th></tr>
<tr><td>(A1)சதீஷ்</td><td>–</td><td>28.05.2024 அன்று முன்பிணை பெற்றுள்ளார்.</td></tr>
<tr><td>(A2)மணி</td><td>–</td><td>28.05.2024 அன்று முன்பிணை பெற்றுள்ளார்.</td></tr>
</table></td></tr>
<tr><td>4.</td><td>குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டு</td><td>எதிரிகள் மீது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 325, 506(ii) –ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பபட்டன.</td></tr>
<tr><td>5.</td><td>BNSS பிரிவு 263(2) ன் கீழான கேள்வி</td><td>23.01.2026</td></tr>
<tr><td>6.</td><td>எதிரிகளின் பதில்</td><td>பொய் வழக்கு</td></tr>
<tr><td>7.</td><td>வழக்கின் விசாரணை தொடங்கிய நாள்</td><td>14.07.2026</td></tr>
<tr><td>8.</td><td>சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td><table>
<tr><th>அரசு தரப்பு சாட்சி கள்</th><th>சாட்சிகளின் பெயர்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>சரஸ்வதி</td><td>14.07.2026</td><td>14.07.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>ஸ்ரீநாத்</td><td>14.07.2026</td><td>14.07.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>பெரியசாமி</td><td>17.07.2026</td><td>17.07.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>9.</td><td>வழக்கின் விசாரணை</td><td>17.07.2026</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | முடிவுற்ற நாள் | |
| 10. | BNSS பிரிவு 351(1)(ஆ) ன் கீழான கேள்வி | 20.07.2026 |
| 11. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | 21.07.2026 |
| 12. | தீர்ப்பு | முடிவாக, எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் மீது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 325, 506(ii) ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1) ன் கீழ் எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 13. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தீர்ப்பின் நகல் வழங்கப்பட்ட நாள் | 21.07.2026 |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | இல்லை. |

******

இந்த வழக்கானது 10.12.2025–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் திருமதி. P. கவிதா., அரசு உதவி

வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. ஆனந்தபாபு, அவர்கள் முன்னிலையாகியும், 21.07.2026–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது , இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கின் சாட்சி மற்றும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

## <u>தீர்ப்புரை</u>

அரசு தரப்பு வழக்கு யாதெனில், இவ்வழக்கின் வாதி சரஸ்வதி என்பவர் 18.04.2024ம் தேதி சேந்தமங்கலம் செல்லியம்மன்பாளையத்தில் உள்ள தனது மாமியார் வெள்ளையம்மாள் வீட்டிற்கு ஓட்டுபோட தனது மகன் சாட்சி–2 ஸ்ரீநாத்துடன் சாயங்காலமாக வந்ததாகவும், இரவு வீட்டில் சாப்பிட்டு கொண்டு இருந்தபோது சாட்சி–1 மகன் ஸ்ரீநாத் பாத்ரூம் போவதாக சென்ற சிறிது நேரத்தில் இரவு 08.30 மணி சுமாருக்கு வாதி பொன் செய்து தன்னை பைக்கை மறித்து இரண்டு பேர் அடிப்பதாக சொன்னதாகவும், வாதி உடனே செல்லியம்மன்பாளையம் கிணத்தருகே சென்று பார்த்த போது இவ்வழக்கின் எதிரிகள் மணி சதீஷ் இருவரும் இருந்ததாகவும் ஏம்பா என் மகன அடிக்கீறீங்க என்று வாதி கேட்டதற்கு, உன் மவன் பைக்ல வேகமா போவான் வருவான் அத பார்த்துக்கிட்டு சும்மா இருக்கனுமா, அதுக்கு நீ சப்போட்டா கண்டாரஓலி என்று திட்டியதாகவும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக இவ்வழக்கின் எதிரிகள் மணி மற்றும் சதீஷ் இருவரும் கையால் வாதியின் கன்னத்தில் வலது கெண்டை கையிலும், அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக இவ்வழக்கின் எதிரிகள் மணி சதீஷ் இருவரும் கையில் தென்னை மட்டையை வைத்துக் கொண்டு உன்னை கொன்று விடுவோம் பார்த்துக்கோ என்று மிரட்டியதாகவும், நிகழ் நிலை புகார்தாரரான சரஸ்வதி கொடுத்த

புகாரின் பேரில் சேந்தமங்கலம் காவல் நிலைய குற்ற எண் 101/2024 ல் எதிரிகள் மீது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 325, 506(ii)–ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணை முடிக்கப்பட்டு எதிரிகள் மீது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 325, 506(ii) ன் கீழும் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2) இவ்வழக்கின் இறுதி அறிக்கை மற்றும் பிற ஆவணங்களின் பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது முதல் நிலை வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இந்த வழக்கினை ஆண்டு பட்டிகை வழக்கு எண் 415/2025 ன் கீழ்கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பானை அனுப்பப்பட்டது.மேற்படி அழைப்பானையின் பேரில் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும், BNSS 230–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

3) வழக்கு ஆவணங்களின் நகல்களை எதிரிகள் படித்துப் பார்க்கப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், BNSS 193–ன்கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து, எதிரிகள் மீது சொல்லப் பட்டுள்ள குற்றம் குறித்து எடுத்துரைக்கப் போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், எதிரிகள் மீது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 325, 506(ii) ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரிகளிடம் வினவிய போது, எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்து, குற்றவாளி இல்லை என்றனர். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**4)** எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க, அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.10** வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டன.

**<u>5). அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:-</u>**

**5.1. அ.சா.1 சரஸ்வதி தனது சாட்சியத்தில்**, வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், வழக்கைப்பற்றி போலீசார் தன்னிடம் விசாரிக்கவில்லை என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை தன்னுடையது தான் என்றும், அதில் உள்ள சங்கதிகள் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் புகார் மனுவில் உள்ள கைரேகை மட்டும் அ.சா.ஆ.1 ஆகவும், சமரச மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.2. அ.சா.2 ஸ்ரீநாத் தனது சாட்சியத்தில்**, வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், வழக்கைப்பற்றி போலீசார் தன்னிடம் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5.3. அ.சா.3 பெரியசாமி தனது சாட்சியத்தில்**, கடந்த 19.04.2024ம் தேதி காலை 07.15 மணிக்கு சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பிரியா என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமைனையில் இருந்து கிடைக்கப்பெற்ற சரஸ்வதி என்பவரின் அடிதடி வழக்கு தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வாதி சரஸ்வதியை விசாரித்து மனு ரசீது பெற்று

மனு ரசீது எண்.131/2024—ன் கீழ் மனு ரசீது வழங்கியதாகவும், பின்பு மேற்படி புகாரின் பேரில் முதற்கட்ட விசாரணை செய்து மேற்படி புகாரின் பேரில் நிலைய கு.எண்.101/2024, சட்டபிரிவுகள் இதச 294(b), 323, 506(ii) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி ஒரு நகலை தனது புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டதாகவும், பின்பு கடந்த 29.04.2024ம் தேதி காலை 09.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜீவா, தர்மன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் சாட்சிகள் சரஸ்வதி, ஸ்ரீநாத், ஜீவா, தர்மன் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் மணி மற்றும் சதீஷ் ஆகியோர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்கள் இவ்வழக்கில் கைது செய்யப்படவில்லை என்றும், 10.06.2024ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.மணிகண்டன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றதாகவும், இவ்வழக்கில் வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.மணிகண்டன் வாதிக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டபிரிவுகளை இதச 294(b), 323, 506(ii) என்பதிலிருந்து இதச 294(b), 325, 506(ii) ஆக சட்டபிரிவுகளை மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டபிரிவுகள் இதச 294(b), 325, 506(ii) பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும்

சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 ன் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், மனு ரசீது அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும், விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும், காயச்சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டது.

6) இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிராக தோன்றும் சாட்சிகளின் சாட்சியம் குறித்து, எதிரிகளிடம் BNSS 351(1)(ஆ)–ன் படி எடுத்துரைக்க, எதிரிகள் பொய் சாட்சியம் என்றனர். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை எனக் கூறியதன்பேரில், எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

7) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

8) அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

9) எதிரிகள் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இவ்வழக்கில் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றும், வாதி தொடுத்த பொய்யான புகாரின் மீது சரியான புலன் விசாரணை செய்யாமல் போலீசார் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பு வழக்கு சந்தேகத்துடன் அமைந்துள்ளது என்றும், எதிரிகள் மீதான

குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை வழக்கு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

**10.1.** இந்த வழக்கின் நிகழ்நிலை புகார் தாரரான சரஸ்வதி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது முதல் விசாரணையில், வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், வழக்கைப்பற்றி போலீசார் தன்னிடம் விசாரிக்கவில்லை என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை தன்னுடையது தான் என்றும், அதில் உள்ள சங்கதிகள் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் கூறியதால் அ.சா.1 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அரசு தரப்பு குறுக்கு விசாரணையின் போது அ.சா.1 எதிரிகளும் தானும் சமாதானமாக சென்று விட்டோம் என்றும், சமரச மனுவில் உள்ள முதல் கைரேகை தன்னுடையது தான் என்றும், குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் மேற்படி சமரச மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது. அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.1 எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டதாக கூறியுள்ள போதிலும், அ.சா.1 யிடமிருந்து எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் எதையும் வெளிக்கொணரவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10.2.** இவ்வழக்கில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள ஸ்ரீநாத் தனது முதல் விசாரணையில், வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றும், வழக்கைப்பற்றி போலீசார் தன்னிடம் விசாரிக்கவில்லை என்றும் கூறியதால் அ.சா.2 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அரசு தரப்பு குறுக்கு விசாரணையின் போது அ.சா.2 எதிரிகளும் தானும் சமாதானமாக சென்று விட்டோம்

என்றும், சமரச மனுவில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் மேற்படி சமரச மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது. அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.2 எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டதாக கூறியுள்ள போதிலும், அ.சா.2 யிடமிருந்து எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் எதையும் வெளிக்கொணரவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10.3. இவ்வழக்கில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள பெரியசாமி தனது முதல் விசாரணையில், கடந்த 19.04.2024ம் தேதி காலை 07.15 மணிக்கு சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் திருமதி.பிரியா என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமைனையில் இருந்து கிடைக்கப்பெற்ற சரஸ்வதி என்பவரின் அடிதடி வழக்கு தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வாதி சரஸ்வதியை விசாரித்து மனு ரசீது பெற்று மனு ரசீது எண்.131/2024-ன் கீழ் மனு ரசீது வழங்கியதாகவும், பின்பு மேற்படி புகாரின் பேரில் முதற்கட்ட விசாரணை செய்து மேற்படி புகாரின் பேரில் நிலைய கு.எண்.101/2024, சட்டபிரிவுகள் இதச 294(b), 323, 506(ii) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி ஒரு நகலை தனது புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டதாகவும், பின்பு கடந்த 29.04.2024ம் தேதி காலை 09.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜீவா, தர்மன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம்,

பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் சாட்சிகள் சரஸ்வதி, ஸ்ரீநாத், ஜீவா, தர்மன் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் மணி மற்றும் சதீஷ் ஆகியோர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்கள் இவ்வழக்கில் கைது செய்யப்படவில்லை என்றும், 10.06.2024ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.மணிகண்டன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றதாகவும், இவ்வழக்கில் வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.மணிகண்டன் வாதிக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டபிரிவுகளை இதச 294(b), 323, 506(ii) என்பதிலிருந்து இதச 294(b), 325, 506(ii) ஆக சட்டபிரிவுகளை மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டபிரிவுகள் இதச 294(b), 325, 506(ii) பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 ன் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், மனு ரசீது அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும், விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும், காயச்சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டது. மேற்படி அ.சா.3 சாட்சியத்தில் இருந்து புலன் விசாரணை முறையாக நடைபெற்றது என்பதை கூற முடியுமே தவிர எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக அறுதியிட்டு கூற இயலாது.

**11)** அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை மிககவனத்துடன் பரிசீலிக்கும் போது அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12) முடிவாக,**

எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் மீது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 325, 506(ii) ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1) ன் கீழ் எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துகள் எதுவும் கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. எனவே, வழக்கு சொத்துகள் குறித்து உத்தரவு இல்லை. எதிரி எழுதி கொடுத்த பிணைய பத்திரங்கள் இவ்வழக்கு மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு தானாக ரத்தாகி விடும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து –தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 21–ஆம் நாள் செவ்வாய்கிழமை** ஆகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.21 17:25:19 +0530

நீதித்துறை நடுவர்,
சேந்தமங்கலம்.

**அரசு தரப்பு சாட்சிகள்–**

| வரிசை எண் | சாட்சிகளின் வரிசை | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் பங்கு |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | சரஸ்வதி | புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | ஸ்ரீநாத் | கண்ணுறு சாட்சி |
| 3. | அ.சா.3 | பெரியசாமி | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்–**

| வரிசை எண் | ஆவணங்களின் வரிசை | ஆவணங்களின் பெயர் | ஆவணங்கள் யாரால் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | புகார் மனுவில் உள்ள கைரேகை மட்டும் | அ.சா.1 |
| 2 | அ.சா.ஆ.2 | சமரச மனு | அ.சா.1 |
| 3 | அ.சா.ஆ.3 | புகார் வாக்குமூலம் | அ.சா.3 |
| 4 | அ.சா.ஆ.4 | மனு ரசீது | அ.சா.3 |
| 5 | அ.சா.ஆ.5 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| 6 | அ.சா.ஆ.6 | பார்வை மகஜர் | அ.சா.3 |
| 7 | அ.சா.ஆ.7 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| 8 | அ.சா.ஆ.8 | விபத்து பதிவேடு | அ.சா.3 |

| | | | |
|---|---|---|---|
| 9 | அ.சா.ஆ.9 | காயச்சான்றிதழ் | அ.சா.3 |
| 10 | அ.சா.ஆ.10 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.3 |

**<u>அரசுத் தரப்பு சான்று பொருள்–</u>** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்–</u>**

இல்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.21 17:25:27 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**<u>குறிப்பு–</u>**

1. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது நீதிமன்றக் காவலில் இல்லை.

2. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

3. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.21 17:25:32 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

<u>CASE SUMMARY</u>

**<u>CC-415/2025, Cr.No. 101/2024</u>**

(CNR.No. TNNM-14-001612-2026)

<u>SENDAMANGALAM POLICE STATION</u>

| S.No | Particulars | Purpose |
|---|---|---|
| i | The period of remand of the accused | - |
| ii | The date of filing of the Complainant/Final report in the Court | 24.11.2025 |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 23.01.2026 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under | Petition \| Crl.M.P.No \| Result |

<table>
<tr><td></td><td>Section 355 of the BNSS</td><td><table><tr><td>U/s.359 of BNSS</td><td>M.P.No.6/2026</td><td>Dismissed</td></tr><tr><td>U/s.438 of Cr.P.C</td><td>11259/2024</td><td>Allowed</td></tr></table></td></tr>
<tr><td>vi</td><td>Date of Examination in-chief and cross-examination of a witness</td><td><table><tr><td>Witness examined as</td><td>Date of Chief Examination</td><td>Date of Cross Examination</td></tr><tr><td>PW1-Saraswathi</td><td>14.07.2026</td><td>14.07.2026</td></tr><tr><td>PW2- Srinath</td><td>14.07.2026</td><td>14.07.2026</td></tr><tr><td>PW3-SteebanLoorthuraj</td><td>17.07.2026</td><td>17.07.2026</td></tr></table></td></tr>
<tr><td>vii</td><td>Date of examination of the accused under section 351(1)(b) of the BNSS</td><td>20.07.2026</td></tr>
<tr><td>viii</td><td>Details of abscondence of an accused and his appearance/production, as the case may be;</td><td>NIL</td></tr>
<tr><td>ix</td><td>Grant of stay by superior Courts and the results thereof</td><td>NIL</td></tr>
</table>

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.21 17:25:38 +0530

Judicial Magistrate,
Sendamangalam.